1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னையை தவிர மற்ற இடங்களில் 33 சதவீதம் சலுகையோடு பஸ்பாஸ் வழங்கப்படுகிறது. அதில் நிச்சயமாக தடையிருப்பதற்கு வாய்ப்பில்லை. 33 சதவீத சலுகையோடு அதனைப் பெற்றுக்கொள்வதில் அவர்களுக்கு எந்தவிதமான தடையும் இருக்காது என்று கருதுகிறேன். அதில் தடை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்தால், எனக்குச் சொன்னால் நடவடிக்கையெடுக்கலாம்.

(முற்பகல் 11–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

வாகன வரிகள்.

488—(*வினா எண் 13830) டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. யு. பி. மாதையன் மற்றும் திரு. சி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனைத்து வாகன வரிகளையும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலேயே பெற்றுக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுதுள்ள மோட்டார் வாகன வரி வசூலிக்கும் முறை சீரிய முறையில் நடைபெற்று வருவதால், இம்முறையே தொடர்ந்து நீடித்து வரலாம் என அரசு கருதுகிறது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவாக்கல்

489—(*வினா எண் 8322)—திரு. பி. என். இராமச்சந்திரன் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீனதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவுபடுத்தி அங்கு திருக்குறள் ஆய்வகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவு படுத்தி திருக்குறள் ஆய்வு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

பெரியகுளம் தொகுதி கும்பக்கரையை சுற்றுலா மையமாக்கல்

490—(*வினா எண் 9095) டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதியில் உள்ள கும்பக்கரை நீர் வீழ்ச்சியை சீர்படுத்தி சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டத்தில் உள்ள கும்பக்கரை நீர் வீழ்ச்சிப் பகுதியை மாவட்ட உலாத்தலமாக மேம்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜெயங்கொண்டம் தொகுதி, மாளிகை மேடு தொல்பொருள் காட்சிக்கூடம்

491—(*வினா எண் 9928)—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள மாளிகை மேடு தொல் பொருள் காட்சிக் கூடத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். இதற்கான கட்டிடம் கட்டும் திட்டம் உள்ளது. மேலும் இக் காட்சிக் கூடத்தில் பார்வைக்கு வைப்பதற்காகப் பல அரிய தொல் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.